

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (10.12.2024) சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், நடிகர் ஜெயராமின் மகன் காளிதாஸ் ஜெயராம் – தாரிணி புதுமண தம்பதியினருக்கு மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி வாழ்த்தினார். உடன் திருமதி. துர்கா ஸ்டாலின் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (10.12.2024) தலைமைச் செயலகத்தில் சட்டப் பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி தனது பிறந்த நாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் கழக பொறியாளர் அணி மாநில செயலாளர் கு.கருணா உள்ளார்.

## கடன் சுமைகளை குறைக்கக் கூடிய முயற்சிகளை நாம் எடுத்திருக்கிறோம்!
## ஒட்டுமொத்த நிதி நிர்வாகத்தில் நம்முடைய வரி வருவாய் உயர்ந்து கொண்டிருக்கிறது!

# முதல்வரின் வழிகாட்டுதலோடு - நமது நிதி மேலாண்மை எல்லா வகையிலும் சிறப்பாக இருக்கும்!

### சட்டப்பேரவையில் – துணை மதிப்பீடுகள் மீதான விவாதத்திற்கு – நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு பதிலுரை!

**சென்னை, டிச. 11-**

**சட்டப்பேரவையில் நேற்று, 2024 - 2025 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகள் மீதான விவாதத்திற்குப் பதிலளித்துப் பேசிய நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு,ஒட்டுமொத்தமானநிதிநிருவாகத்திலே நம்முடையவரிவருவாய்உயர்ந்துகொண்டிருக்கிறது. நம்முடைய நிதி மேலாண்மையின் காரணமாக கடன் சுமைகளை நாம் குறைக்கக்கூடியமுயற்சிகளைஎடுத்திருக்கிறோம். நிச்சயமாக முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு வரக்கூடிய காலங்களில் நம்முடைய நிதி மேலாண்மை எல்லா வகையிலும் சிறப்பாக இருக்கும்" என்று உறுதிபடக் குறிப்பிட்டார்.**

சட்டப்பேரவையில் துணை மதிப்பீடுகள் மீதான விவாதத்திற்கு - நிதி அமைச்சரின் பதிலுரை வருமாறு : -

2024 -2025 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகள் மீதான விவாதத்திற்குபதிலளிக்கக்கூடியவாய்ப்பினை வழங்கியிருக்கக்கூடிய நம்முடைய முதலமைச்சர்அவர்களுக்கும்,தங்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அவை முன்னவர், துணை முதலமைச்சர்உள்ளிட்டஅவையோருக்குஎன்னுடைய வணக்கம்.

இந்த துணை மதிப்பீடுகள் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துகளை தெரிவித்து இருக்கிறார்கள். அவர்களுக்குரிய பதிலையும்நம்முடைய அமைச்சர் பெருமக்கள்வழங்கியிருக்கிறார்கள்.குறிப்பாக இங்கேபேசியஅனைத்திந்தியஅண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சட்டமன்ற உறுப்பினர் நம்முடைய வரி பங்கீடு, முறையை குறிப்பிட்டு, "ஒன்றிய நிதியமைச்சர்இவ்வாறுதெரிவித்துஇருக்கிறார்களே அதற்கு என்ன பதில்? என்று கேட்டிருக்கிறார்.



GST taxation patternஐ பொறுத்தமாட்டில் SGSTல் நமக்கு 50 சதவிகிதம், அதேபோல CGSTல் 50 சதவிகிதம், IGSTல் அதைபோல இரண்டு மாநில அரசுக்கும் ,மத்தியஅரசுக்கும்50சதவிகிதமாகஇருக்கக்கூடிய ஒன்று. இதிலே SGSTஐ பொறுத்தமட்டில் மொத்தமாக அந்த நிதி மாநில அரசிற்கு அவ்வப்போது விடுவிக்கப்படுகிறது.

CGSTஐ பொறுத்தமட்டில் ஒன்றிய அரசிற்கு சேரக்கூடிய நிதி பகிர்ந்து அளிக்கப்படக் கூடிய நிதியில் இருந்து devolution 41 சதவிகிதம் அனைத்து மாநிலங்களுக்குமேஅதுவழங்கப்படக்கூடியதாகஇருக்கிறது.

குறிப்பாக15வதுநிதிக்குழுவானதுமத்தியஅரசினுடையதொகுப்பில்இருந்து41 சதவிகிதம் மாநில அரசுகளுக்கு வழங்க வேண்டுமென்று பரிந்துரைத்து இருக்கிறது. இருப்பினும் 41 சதவிகிதம் நமக்கு கிடைத்து இருக்கிறதா என்றால் அது இல்லை. அது 33 சதவிகிதம் என்ற அளவிலே இருந்து இருக்கிறது. அந்த 33 சதவிகிதத்தில் தமிழ்நாட்டிற்கு கிடைத்து இருப்பது வெறும் 4.07 சதவிகிதம்தான் நமக்கு கிடைத்து இருக்கிறது. ஆனால் அதேநேரத்தில் உத்தரப்பிரதேசத்திற்கு 17.9 சதவிகிதமும், பீகாருக்கு 10 சதவிகிதமும் அது கிடைத்து இருக்கிறது என்பதை நான்இந்தஅவைக்குசுட்டிக்காட்டவிரும்புகிறேன்.

அதேபோல ஒன்றிய அரசின் மொத்த வரி வருவாயில் 16.83 சதவிகிதம் என்ற அளவில் வசூலிக்கக்கூடிய மேல் வரி மற்றும்கூடுதல்கட்டணமானதுமாநிலஅரசுகளுக்கு பகிர்ந்து அளிக்கப்படாத ஒரு நிலை இருக்கிறது. எனவேதான் முதலமைச்சர் அவர்கள் அண்மையிலே வந்திருக்கக்கூடிய 16 வது நிதிக்குழுவில் அவர்கள்அழுத்தம்திருத்தமாகஎடுத்துவைத்து இருக்கிறார்கள்.

ஒன்றியஅரசில்இருந்துபகிர்ந்துஅளிக்கக்கூடிய அந்த நிதியில் இருந்து குறைந்தபட்சமாக50சதவிகிதம்மாநிலங்களுக்கு வழங்கவேண்டும் என்று அவர்கள் எடுத்து வைத்து இருக்கிறார்கள். அதேபோல மேல்வரி மற்றும் கூடுதல் கட்டணங்களுக்குஒருceilingவரவேண்டும். 10 சதவிகிதத்திற்கு மட்டும் அவர்கள் வசூலிக்கக்கூடிய ஒரு செயல்முறையை கொண்டுவரவேண்டும்.அதற்குமேலாக அவர்கள் வசூலித்தால் நிச்சயமாக அந்த கூடுதல் தொகை பகிர்ந்தளிக்கக்கூடிய தொகுப்பில் devolutionல் கொண்டு வர வேண்டுமென்றும் அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். எனவே, இதுதான் அதில் இருக்கக்கூடிய ஒரு முக்கியமாக ஒன்று. அதேபோல அவர்கள் பேசுகின்றபோது, அந்தக் கடன் அமைப்பைப்பற்றி குறிப்பிட்டுசொன்னார்கள். நமக்கு 9வது நிதிக்குழுவில்இருந்துநீங்கள்பார்ப்பீர்கள் என்றுசொன்னால்தொடர்ந்து,தமிழ்நாட்டிற்கு அநீதி இழைக்கப்படுகின்றது.

குறிப்பாக 14வது நிதிக் குழு காலத்தில், கடந்தகாலங்களில்சுமார்19%நமக்குநிதி குறைப்பு நடந்திருக்கிறது. இது சுமார் இரண்டு இலட்சத்து அறுபத்து மூன்றாயிரம் கோடி ரூபாய் இழப்பாக இருக்கிறது. நம்முடைய கடன் அளவில் 32% இருக்கக்கூடியது. கடந்த கால நிதிக் குழுவினுடைய பரிந்துரைகள்தான் தமிழ்நாட்டிற்கு பெரிய பாதகத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

அந்தப் பாதகம் இல்லாவிட்டால் அது நிச்சயமாக வந்திருக்கும் என்பதை நான் தெரிவித்து, இதுதான் அவர்கள் கேட்ட கேள்விக்கு முக்கியமான ஒரு பதில் என்பதைச்சொல்லி, ஒட்டுமொத்தமானநிதிநிருவாகத்திலே நம்முடைய வரி வருவாய் உயர்ந்துகொண்டிருக்கிறது. நம்முடைய நிதிமேலாண்மையின்காரணமாககடன் சுமைகளைநாம்குறைக்கக்கூடியமுயற்சிகளை எடுத்திருக்கிறோம். நிச்சயமாக முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு வரக்கூடிய காலங்களில் நம்முடையநிதிமேலாண்மைஎல்லாவகையிலும் சிறப்பாக இருக்கும் என்பதைச் சொல்லிஎன்னுடையஉரையைநிறைவு செய்கிறேன்

இவ்வாறு அமைச்சர் தங்கம் தென்னரசு பதிலுரை வழங்கினார்.


